செய்தி வெளியீடு எண்: 381 நாள் : 15.07.2013

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (15.7.2013) மாலை மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்ய ஒத்துழைப்பு நல்கியமைக்கு தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த தொலைபேசி உரையாடலின்போது, செபி நிறுவன அதிகாரிகளுடனும், மத்திய அரசு அதிகாரிகளுடனும் தமிழ்நாடு அரசு அதிகாரிகள் இன்று (15.7.2013) மும்பையில் பேச்சுவார்த்தை நடத்தினர் என்றும், மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் தலையீட்டின் பேரில், அந்த பேச்சுவார்த்தையின் இறுதியில் திருப்திகரமான உடன்பாடு ஏற்பட்டது என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும், இந்த உடன்பாட்டினைத் தொடர்ந்து தான் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளதாகவும், அந்த அறிக்கையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத் தொழிலாளர்கள் உடனடியாக வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு பணிக்குத் திரும்ப வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும், இந்த வேண்டுகோளினை ஏற்று தொழிலாளர்கள் உடனடியாக பணிக்குத் திரும்புவார்கள் என்று தான் நம்புவதாகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு பாரத பிரதமரிடம் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் எடுத்த நடவடிக்கைக்கு தனது பாராட்டுதலையும், நன்றியினையும் தெரிவித்துக் கொண்டதோடு, தான் எப்போதும் மாநில அரசுடன் இணக்கமான உறவை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 15.7.2013